# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2369/06 - 2024 ජනවාරි මස 29 වැනි සඳුදා - 2024.01.29

*2369/06 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களை நியமித்தல்**

2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 14 ஆம் பிரிவின் 4 ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் சுகாதார அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரண ஆகிய நான், கீழே காணப்படும் அட்டவணையில் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதேசத்திற்கும் மற்றும் சேவை அவசியப்படுமிடத்து பணியாற்றுவதற்கு அவர்களை நியமிக்கக்கூடிய வேறு எந்தப் பிரதேசத்திற்கும் இச்சட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு இந்த அட்டவணையில் கீழே காட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களாக நியமிக்கின்றேன். இவர்களின் பதவிவழி நிலையினைக் கருத்திற்கொண்டு இவர்களுக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளதுடன், இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அப்பதவியை வகிக்கும் தற்போதுள்ள உத்தியோகத்தர்களும் மற்றும் காலத்திற்குக்காலம் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படும் உத்தியோத்தர்களும் இதில் உள்ளடக்கப்படுவர். இந்த அனைத்து நியமனங்களும் அந்தந்த உத்தியோகத்தர்கள் சேவையில் இருக்கும் வரை வலுவில் இருக்கும்.

2011/ 33 ஆம் இலக்கமிடப்பட்ட 24.03.2017 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அத்தகைய சகல நியமனங்களும் தொடர்ந்து வலுவில் இருக்கும்.

டாக்டர் **ரமேஷ் பத்திரண**,
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2023, திசெம்பர் 20.*


1A - PG 6631 — 154 (2024/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

1. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் - ஒதுக்கீடு செய்யப்பட்ட மாகாணம்
2. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் பரிந்துரைக்கப்படும் (PDHS) அலுவலகத்தில் பணியாற்றும் மருத்துவ அதிகாரி பதவிநிலை தரத்திற்கு குறையாத ஒரு அலுவலர் - ஒதுக்கீடு செய்யப்பட்ட
3. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் - ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவு/ பிரிவுகள்
4. பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரினால் பரிந்துரைக்கப்படும் (RDHS) அலுவலகத்தில் பணியாற்றும் மருத்துவ அதிகாரி பதவிநிலை தரத்திற்கு குறையாத ஒரு அலுவலர் - ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவு/ பிரிவுகள்
5. பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் (DPDHS) ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரிவு/ பிரிவுகள்
6. சுகாதார மருத்துவ அதிகாரிகள் - அந்தந்த பகுதிகளுக்கு மற்றும் அதுபோன்ற பிற தொடர்புடைய பகுதிகளில் பணிகளை மேற்கொள்ளும் போது அத்தகைய பகுதிகளுக்கும்
7. செயலாளர் - தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபை - நாடளாவிய ரீதியில்

   - இலக்கம் 02 மற்றும் 04 தொடர்பில் தனித்தனி நியமனக் கடிதம் வழங்கப்படும்.

EOG 01 - 0219

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.